# வலயக்கல்வி அலுவலகம்
# மன்னார்

## தரம் 5 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை - 03
## வினாப்பத்திரம் 2

**சுட்டெண் - .....................................** **நேரம் - 1 மணித்தியாலம் 15 நிமிடம்**

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்

- உங்கள் சுட்டெண்ணை அடைப்புக்குள் உள்ள புள்ளிக்கோட்டிலும் 3வது பக்கத்திலுள்ள புள்ளிக் கோட்டிலும் எழுதுக.
- இவ்வினாத்தாளில் 62 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தளிலேயே எழுதுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | ……………….. பெயர்<br>……………… ஒப்பம் |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரயென உறுதிப்படுத்துகின்றேன். | ……………….. பெயர்<br>……………… ஒப்பம் |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ……………….. பெயர்<br>……………… ஒப்பம் |
| | |

01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

மரவளர்ப்பு பற்றிய விழிப்புணர்வு பெருகி வரும் நேரம் இது. மரங்கள் மனித குலத்துக்குச் செய்துவரும் நன்மைகள் கணக்கில் அடங்காதவை. மரங்கள் நிறைந்த காடுகள் மழைப்பொழிவினை உண்டாக்கும். அசுத்த வாயுவான கரியமில வாயுவை தாம் உட்கொண்டு மனிதர்களுக்குத் தேவையான ஒட்சிசனை மரங்கள் வெளியிடுகின்றன. சாலை ஓரங்களில் நிற்கும் மரங்கள் நிழல் கொடுத்துப் பயணத்தை இனிமையாக்குகின்றன. உணவாகும் பல காய்களையும் கனிகளையும் மரங்கள் அள்ளித் தருகின்றன. வனவிலங்குகள் வாழும் இடங்களாக விளங்குபவை அடர்ந்த மரங்கள் சூழ்ந்த காடுகளே! நம் வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் பலவும் தருவது மரங்களே! இரப்பர், மூலிகைகள், வீட்டுக் கட்டுமானப் பொருட்கள் போன்றவற்றை மரங்கள் தருகின்றன. பறவைகள் கூடுகட்டி வாழ்வதற்கு வாடகை வாங்காமல் இடம் தந்து உதவுகின்றன. மரங்களின் பட்டைகள், இலைகள், வேர்கள் எனப் பலவும் மருந்துப் பொருட்களாகவும் பயனாகின்றன. எனவே வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்! நம் எதிர்கால சந்ததியினரின் நன்மையைக் கருதி மர வளர்ப்பில் ஈடுபடுவோம்!

1) மழைப்பொழிவினை உண்டாக்குபவை எவை?.................................................................................

2) மரங்கள் உள்ளெடுக்கும் வாயு எது என குறிப்பிடப்பட்டுள்ளது ..........................................

3) வீதி எனும் சொல்லுக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய ஒரு சொல்லை பந்தியிலிருந்து எழுதுக.........................................................................

4) மருந்துப் பொருட்களாக பயன்படுகின்ற மரங்களின் பகுதிகள் எவையென பந்தியில் கூறப்பட்டுள்ளன?

.................................................................................................................................................

5) எதிர்க்கருத்துச் சொற்சோடிகளை எழுதுக?. ....................................................................

6) மேற்தரப்பட்ட பந்தியானது பிரதானமாக எதன் விழிப்புணர்வு பற்றிக் கூறுகின்றது ....................................................

( 6 புள்ளிகள் )

02) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக

1) பழவகை - .................................................. 2) மட்குடம் - ..........................................

03) பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✗ ) எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.

1) கண்களில் இருந்து கண்ணீர் கசிந்தது. (    )

2) தம்பி அக்காவுடன் கடைக்குச் சென்றோம். (    )

3) நான் நாளை சுற்றுலாவிற்கு வந்தேன். (    )

4) பறவைகள் கூட்டமாகப் பறந்தன. (    )

5) நட்சத்திரம் வானில் மின்னின. (    )

( 5 புள்ளிகள் )

04) பின்வரும் பேச்சு வழக்குச் சொல்லை எழுத்து வழக்குச் சொல்லாக மாற்றி எழுதுக.
1) தலகணி - .....................

05) பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.
1) எவ்வளவு பெரிய மலை

06) பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க..

1) சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட ஏனைய விலங்குகள் ஓடி ................. ( ஒழிந்தன, ஒளிந்தன )
2) அவன் ................. வைத்து எலியைப் பிடித்தான். ( பொரி, பொறி )

( 2 புள்ளிகள் )

07) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்க.

1) அச்சாணி இல்லாத தேர் ................................ ஓடாது.

08) பின்வரும் சுருக்கக்குறியீடுகளின் விரிவாக்கத்தினை எழுதுக.

1) இ.போ.ச - ..........................................................................
2) கி.பி - ...............................................................................

09) பின்வரும் தொடர்மொழிக்கான ஒருமொழியை எழுதுக.

1) புதிதாகச் செய்த கப்பல், தேர் என்பவற்றை முதன் முதலாக செலுத்திப்பார்த்தல் .................................................................

10) எதிர்ப்பாற் சொல்லை எழுதுக.

1) பாக்கியவதி - ..............................................

11) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

1) நல்ல / நித்திரை / பழக்கம் / ஆகும் / விட்டெழுவது / அதிகாலையில்

..........................................................................................................................................................

12) வெற்றிடங்களை நிரப்புக.

1) கற்றாளை சோறு என்பது போல நிலக்கடலை ......................................
2) சிங்கம் கர்ச்சிக்கும் என்பது போல பன்றி .................................. (25 புள்ளிகள்)

13) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்க்கருத்தை எழுதுக.

1) National flag - .................................. 2) Flowers - ...........................

14) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.

1) are / you / going? / Where

.............................................................................................................................


15) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொல்லை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

1) வங்கி - .................................... . 2) திறவுங்கள் - ..........................................


16) பின்வரும் சிங்கள வாக்கியங்களின் தமிழ்க்கருத்தை எழுதுக.

1) தே பொன்ன - .................................................................
2) ஒபே அய்யா கவுத? - ...................................................................... (7 புள்ளிகள்)

விடை எழுதுக.

17) 


வட்டத்தினுள் உள்ள நான்கு இலக்கங்களையும் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணின் பத்தினிடத்து இலக்கம் யாது?
.................................................................

18) 

அருகிலுள்ள கட்டத்தினுள் காணப்படும் நட்சத்திரங்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்கை உரோமன் எண்ணில் எழுதுக.

....................................

19) 3m நீளமுள்ள றிபன் துண்டிலிருந்து 3cm நீளமுடைய 3 துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டன. மீதியாக உள்ள றிபன் துண்டின் நீளத்தை சென்ரிமீற்றரில் எழுதுக.

.............................................................................................................

20) சிவா மு.ப 11.30 மணிக்கு புறப்பட்டுச் சென்று 3 மணித்தியாலம் பயணித்து தனது நண்பனின் வீட்டை அடைந்தான். அவன் நண்பனின் வீட்டைச் சென்றடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக.

.............................................................................................................

21) 


உருவில் நிழற்றப்படாத பகுதியைத் தசம எண்ணில் எழுதுக.

..........................................................................

22) சூரியன் உதிக்கும் திசைக்கு எதிர்த்திசை யாது? ..................................................

23) ஒரு கோழிப்பண்ணையில் 5096 கோழிகள் காணப்பட்டன. பண்ணையின் முதல்நாள் 958 கோழிகளை விற்றான். அடுத்த நாள் முதல் நாள் விற்றதிலும் பார்க்க 12 கோழிகள் கூடுதலாக விற்றான். மூன்றாம் நாள் பண்ணையில் இருந்த கோழிகள் எத்தனை?

.............................................................................................................

24) 


உருளை ஒன்றை ஆக்குவதற்கு மேலுள்ள தளவடிவங்களில் இருந்து பயன்படுத்தக்கூடிய தளவடிவங்களின் ஆங்கில எழுத்துக்களை எழுதுக.

.............................................................................................................


25) ஒரு பையில் 630 இனிப்புகளும் இன்னொரு பையில் 1815 இனிப்புக்களும் காணப்பட்டன. இரு பைகளிலும் உள்ள இனிப்புக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.............................................................................................................

26) 624 பென்சில்களை ஆறு சிறுவர்களுக்குச் சமமாக பகிர்ந்து கொடுத்தால் ஒருவருக்குக் கிடைக்கும் பென்சில்களின் எண்ணிக்கை யாது?

.............................................................................................................


27) 5kg 500g நிறையுடைய பூசனிக்காயிலிருந்து 1kg 250g நிறையுடைய இரு துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டன. வெட்டி எடுக்கப்பட்ட துண்டுகளின் மொத்த நிறை யாது?
.........kg............ g

28) cm 

அருகிலுள்ள கடதாசிக்கீலத்தின் நீளம் ……..cm

29) ஒரு வியாபாரி 10 தேங்காய் வாங்கும்போது ஒரு தேங்காய் இலவசமாசக் கொடுத்தான். 15 தேங்காய்களை இலவசமாகப் பெற்ற ஒருவர் வாங்கிய தேங்காய்கள் எத்தனை?


……………………………………………………………………………………………………

30) 


A பாத்திரத்தை நிரப்புவதற்கு B பாத்திரத்தால் எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும்?

……………………………………………………………………………

31) ஒரு குழுவில் உள்ள மாணவர்களிடம் அவர்கள் விரும்பி உண்ணும் பழங்கள் பற்றிக் கேட்கப்பட்டு தகவல்கள் குறிக்கப்பட்டன.




1) மாணவர்களில் அதிகமானோர் விரும்பி உண்ணும் பழம் எது?

……………………………………………………………………………………………

2) இக்குழுவிலுள்ள மொத்த மாணவர்கள் எத்தனை பேர்?

……………………………………………………………………………………………

(30 புள்ளிகள்)

மிகச் சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

32) இலங்கையின் தேசிய மரத்தின் பூவின் நிறம் யாது?

1) வெள்ளை 2) இளஞ்சிவப்பு 3) ஊதா

33) கடதாசிக் கழிவுகளை இடவேண்டிய குப்பைக்கூடையின் நிறம் யாது?

1) சிவப்பு 2) நீலம் 3) பச்சை

34) தேசியக்கொடி ஏற்றும்போது கம்பத்திற்கு அருகில் இருக்கும் நிறக்கீலம் குறிக்கும் மக்களினம் எது?

1) தமிழர் 2) முஸ்லிம் 3) சிங்களவர்

35) உணவாகப் பயன்படும் பூ எது?

1) அகத்திப்பூ 2) மல்லிகை 3) நித்தியகல்யாணி

36) வீட்டில் இயற்கையாகக் காணப்படாத பிராணி எது?


1) கிளி 2) பல்லி 3) எறும்பு

37) நாம் கட்டாயமாக உண்ணவேண்டிய உணவுவேளை எது?

1) மதியவேளை 2) இரவுவேளை 3) காலைவேளை

38) தத்துவஞானியாகவும் சட்ட அறிஞராகவும் மொழி பெயர்ப்பாளருமாக இருந்தவர் யார்?

1) 

2) 

3) 

39) விளக்குமாறு ஒன்றைப் பயன்படுத்திய பின்னர் அதனை வைக்க வேண்டிய சரியான முறை?

1) நிலத்தில் கிடையாக வைத்தல்.

2) தொங்க விடுதல்.


3) ஈர்க்குகள் மேல்நோக்கி இருக்குமாறு வைத்தல்.

40) சூரியஒளியிலுள்ள நிறம் அல்லாதது எது?

1) ஊதா 2) கறுப்பு 3) நீலம்

41) இழுத்தல் செயற்பாட்டுடன் தொடர்புடைய உபகரணம் எது?.

1) ஒற்றைச்சில்லு வண்டி 2) கப்பி 3) பாக்குவெட்டி

42) 

அருகிலுள்ள குறியீடு குறித்து நிற்கும் கருத்து

1) கவனமாகக் கையாளவும்.

2) நனையக்கூடியது.

3) அபாயம்

43) காலவேறுபாடின்றிப் பூப்பூக்கும் தாவரம் எது?

1) தென்னை 2) மா 3) இலுப்பை

44) தாளம் செய்வதற்குத் தேவையான பொருட்கள் எவை?

1) இரண்டு தகரப்பேணிகள்

2) இரண்டு சிரட்டைகள்

3) சோடாமூடிகள்

45) நத்தார் பண்டிகை, பாஸ்கு வருடாந்த விழா என்பவற்றை கொண்டாடும் மதத்தவரின் வழிபாட்டிடம் எது?

1) கிறிஸ்தவர் 2) தேவாலயம் 3) பள்ளிவாசல்

46) நாம் நஞ்சுத்தன்மையற்ற காய்கறிகள், பழங்களைப் பெற செய்ய வேண்டியது?

1) கிருமிநாசினிகளைப் பயன்படுத்துதல்.

2) சேதனப் பசளையிடல்.

3) இரசயானப் பசளையிடல்.

47) கொடபறை, கெக்கட்டியா, ஹீன்போவிட்டியா என்பன இலங்கைக்கு உரித்தான

1) மீன்களாகும். 2) தாவரங்களாகும். 3) நகருயிர்களாகும்.

48) வித்து முளைப்பதற்கு அவசியமற்ற காரணி எது?

1) சூரியஒளி 2) வெப்பம் 3) நீர்

49) கிளைகளற்ற தாவரம் அல்லாதது எது?

1) பலா 2) கமுகு 3) தென்னை

50) நேரசூசிப்படி செயற்படுவதால் ஏற்படும் நன்மைகளுள் ஒன்று?

1) நேரம் வீண்விரயமாகும்.


2) சினம் ஏற்படும்.

3) உரிய நேரத்தில் வேலைகளைச் செய்து முடிக்கலாம்.

51) தனியாகப் பயன்படுத்தும் பொருள் அல்லாதது?

1) மூக்குக்கண்ணாடி 2) முகம் பார்க்கும் கண்ணாடி 3) சீப்பு

52)



இவ் அமைப்பின் மூலம் எமக்குக் கிடைப்பது.?

1) சூரிய சக்தி

2) நீர் மின்சக்தி

3) அனல் மின்சக்தி

53) தூயநீரின் இயல்பாகக் கருத முடியாதது?

1) மணமுண்டு 2) சுவையில்லை 3) நிறமில்லை

54) அதிவேக நெடுஞ்சாலையைக் குறிக்கப் பயன்படும் நிறம் யாது?

1) சிவப்பு 2) ஊதா 3) கறுப்பு

55) தற்போது எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள பாதிப்பு அல்லாதது?

1) வறுமை ஏற்பட்டமை

2) உணவுப் பொருட்களின் விலையேற்றம்.

3) ஏழை மக்கள் மகிழ்வாக வாழ்கின்றமை.


56) வீதியில் சென்றுகொண்டிருந்த உம்மை தெரியாத ஒருவர் அழைத்துச் செல்ல முயல்கின்றார். இவ்வேளையில் நீர் செய்ய வேண்டியது?

1) அவருடன் செல்லுதல்.

2) சத்தமிட்டு பிறரை அழைத்தல்.

3) அமைதியாக நிற்றல்.

57)




உருவில் A, B, C என்ற ஆங்கில எழுத்துக்கள் குறிப்பவை முறையே.

1) ஆணி, செப்புக்கம்பி, உலர்மின்கலம்

2) உலர்மின்கலம், செப்புக்கம்பி, ஆணி

3) உலர்மின்கலம், ஆணி, செப்புக்கம்பி

58) காந்தமொன்றின் தென்முனையைக் காட்டும் நிறம் எது?

1) சிவப்பு    2) நீலம்    3) மஞ்சள்

59) புவிக்கு மிகவும் அண்மையிலுள்ள கோள் எது?

1) புதன்    2) வெள்ளி    3) செவ்வாய்

60) வரலாற்று சிறப்புமிக்க சாலையோரத் தங்குமிடம் எது?

1) எம்பக்க தேவாலயம்    2) அம்பலம்    3) தாமரைக் கோபுரம்

61) வடக்குத் திசையில் ஏழு உடுக்கள் கொண்ட தொகுதி எவ்வாறு அழைக்கப்படும்?

1) தென்சிலுவை    2) கலப்பை    3) கார்த்திகை

( 30 புள்ளிகள் )

**62) மனிதன் நோயின்றி நலமுடன் வாழ சுற்றுச் சூழல் தூய்மையானதாக இருக்க வேண்டும். சூழலைப் பாதுகாக்க உம்மால் செய்யக்கூடிய செயற்பாடுகள் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.**

( ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டல்களும் சரியாக இருத்தல் வேண்டும். )

1)..........................................................................................................................

..........................................................................................................................

2)..........................................................................................................................

..........................................................................................................................

3)..........................................................................................................................

..........................................................................................................................

( 6 புள்ளிகள் )